**நியாகம பிரதேச சபை**

**காலி மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 22 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நியாகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

-----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

------------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வுபெற்ற உள்ளூராட்சி ஊழியர்கள் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ரூபா 2,423,098 தொகை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1999 மே 07 ஆந் திகதி சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 182,000 இற்கான இலக்கம் 67-2998 கொண்ட டிரக்டர் டேலர் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 2010 ஆண்டின் போது சபைக்கு வழங்கியிருந்த ரூபா 1,499,800 இற்கான டிரக்டர் மற்றும் டேலர் வண்டி நிதிக் கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உடன்படிக்கைகள் மேற்கொடுக்கப்படாமல் காணப்பட்ட இரண்டு நிர்மாண வேலைகளான மார்த்துபிடிய தொங்கு பாலம் மற்றும் மத்தக அத்கொடுவ பாலம் ஆகியவற்றின் நிர்மாண வேலைக்காக முறையே ரூபா 483,055 மற்றும் ரூபா 574,957 ஆக மொத்தம் ரூபா 1,058,012 தொகைக்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவுகள் மறறும் கடன்கொடுத்தோர் ரூபா 1,058,012 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 66,950 இற்கான நிலையான சொத்துக்கள் கொள்வனவு நிதிக் கூற்றுக்களில் மீண்டுவரும் செலவுகள் எனக் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 2013 மகநெகும செயற்திட்டத்தின் கீழ் 29 நிர்மாண வேலைகளுக்காக கிடைக்க வேண்டிய தொகை ரூபா 14,500,000 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 21,805,528 என காட்டப்பட்டிருந்தமையால் கடன்பட்டோர் மற்றும் மூலதன உதவி ரூபா 7,305,528 இனால் மிகையாக காட்டப்பட்டுள்ளது.

(ஊ) முன்னைய ஆண்டுகளின் போது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,097,618 இற்கான கடன்கொடுத்தோர் தொடர்பாக மீளாய்வாண்டின் போதும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் ரூபா 1,097,618 இனால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்புக்கள் என தென் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 9,679,260 தொகையினை அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களின் கீழும் பகிரப்படாமல், ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்திரம் காட்டப்பட்டுள்ளது.

(ஏ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் பிட்டிகல வாராந்த சந்தை மற்றும் பல் தொழில் வளவு நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மூலதன உதவித் தொகை ரூபா 12,423,065 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 12,884,671 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி மற்றும் கடன்பட்டோர் ரூபா 461,606 மிகையாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஐ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிடைக்க வேண்டிய மூலதன உதவிகள் ரூபா 1,200,000 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 2,141,010 தொகை என

காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி மற்றும் கடன்பட்டோர் ரூபா 941,010 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஒ) நிர்மாண வேலைகளுக்காக ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருக்காத போதும் நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3,304,221 தொகையொன்று நிர்மாண வேலை கடன்பட்டோர் என ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஓ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் பிட்டிகல வாராந்த சந்தை மற்றும் பல்தொழில் வளவு நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கடன்கொடுத்தோர் மீதி ரூபா 15,000,000 தொகை எனினும், அவை நிதிக் கூற்றுக்களில் ரூபா 12,884,671 என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 2,115,329 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டிற்கான ரூபா 4,032,466 இற்கான வருமானங்கள் பில்போடும் போது அதற்கான நாட்குறிப்புக்கள் பயன்படுத்தியிருக்கவில்லை.

### 1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 235,514 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 139,476,281 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், நாளது வரை ஆக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டு சபை அறிக்கைகள், முறைப்படி பேணப்பட்டிருந்த கடன்கொடுத்தோர்/ கடன்பட்டோர் பதிவேடு, காலப்பகுப்பாய்வு, மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ் மற்றும் கடன் பதிவேடுகள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

---

### 2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 832,556 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,083,163 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------

2.2.1 வீதவரி, ஏக்கர் வரி மற்றும் வாராந்த சந்தை வரி

-----------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 338,618 இற்கான வீதவரி ரூபா 69,237 இற்கான ஏக்கர் வரி மற்றும் ரூபா 50,543 இற்கான சந்தை வாடகை 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம்

--------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக சபையினால் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 126,000 இற்கான வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,216,750 இற்கான நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் ரூபா 4,368,394 இற்கான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.3 மிகை விதிப்புக்கள்

--------------------------------

1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்டுள்ள 09 மிகை விதிப்புக்கள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 432,927 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டிருந்த 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவையின் நிமிர்த்தம் 04 மந்திரிமார்களினால் மீளாய்வாண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 21 சபை ஊழியர்களுக்கு சபை நிதியத்திலிருந்து செலுத்தியிருந்த ரூபா 1,581,995 இற்கான நிலுவை சம்பளத்தினை உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையில் கடமையாற்றிய இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் ஓய்வுபெற்றுள்ள 05 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 16,901 இற்கான கடன் மீதி ஒன்று 2006 ஆண்டு முதல் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 செயற்படாத சொத்துக்கள்

-------------------------------------------

2013 ஜுன் 05 திகதிய இலக்கம் PCMD/PR/2013 கொண்ட ஜனாதிபதி செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத அழிவு நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறித் தொகுதிகளை 2013 செப்டம்பர் 05 திகதி அளவில் அகற்றுவதற்கான வேலை திட்டம் ஒன்றினை தயாரிக்கும் படி அறிவித்திருந்த போதும், சபைக்குச் சொந்தமான டிரக்டர் ஒன்று, டேலர் ஒன்று மற்றும் கப் வண்டி ஒன்று சபை வளவில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது என 2014 அக்டோபர் 23 திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

3.4 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------

(அ) ஜனாதிபதி செயலாளரின் 2014 மார்ச் 21 திகதிய இலக்கம்: சீஎஸ்ஏ/1/8/1/1 கொண்ட சுற்று நிருபத்திற்கு 2014 மே 25 திகதி சமர்ப்பித்திருந்த திருத்திய சுற்று நிருபத்தின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களில் நிதியத்தினை பயன்படுத்தி ஏற்பாடு செய்யப்படும் வெளிநாட்டு கல்வி சுற்றுலாக்கள் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டிருந்தது. அவ் ஏற்பாடுகளுக்கு முரணாக 2014 ஜுன் 29 திகதி முதல் ஜூலை 04 திகதி வரை சீனாவில் நடைபெற்றுள்ள உள்ளூராட்சி முறைமை மற்றும் நல்ல பழக்க வழக்கங்கள் பற்றிய கல்விச் சுற்றுலா ஒன்றிற்காக தலைவர் பங்குபற்றுவதற்காக 2014 மே மாதத்தில் ரூபா 160,000 தொகையொன்று இலங்கை உள்ளூராட்சி நிறுவனங்களின் மன்றத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு மாற்றமாக தலைவர், உப தலைவர் உட்பட சபை மந்திரிமாரின் கல்வி சுற்றுலா ஒன்றிற்காக சபை நிதியத்தில் இருந்து 2013 செப்டம்பர் 25 திகதி ரூபா 100,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் சபையின் விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்